**16.10.2023.**

**LAOP No. 54/2023**

**CW.1 - கிருஷ்ணன் த/பெ ஜாகா சின்னப்ப செட்டி**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 2-ம் கோருரிமையாளர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

நெடுஞ்சாலைக்காக நிலம் எடுத்துக்கொண்ட போது சர்வே எண் 497/1 ல் உள்ள எனது நிலம், அதற்கு கிழக்கு பக்கம் உள்ள சென்னம்மாள் நிலம் மற்றும் அதற்கு அடுத்தாற்போல் இருந்த மற்றவர்களின் பங்கு குறித்து தனியாக உட்பிரிவு செய்துக்கொடுக்கவில்லை என்றால், அதுப்பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண் 497/1 ல் உள்ள நிலத்தை பொறுத்து எங்களுக்கு கூட்டுப்பட்டா இருந்தது என்றும், தனித்தனியாக உட்பிரிவு செய்து எங்களுடைய பங்கு பிரிக்கப்பட்டிருக்கவில்லை என்றால், அதுப்பற்றி தெரியாது. என் பங்கு என் அப்பா எனக்கு கொடுத்தது. என் பெயருக்கு தனிப்பட்டா உள்ளதா, பட்டா பெயர் மாற்றம் செய்துக்கொள்ளப்பட்டதா என்றால் இல்லை. நான்கு ரோடு போடுவதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்த போது அசோகன் என்ற பெயருடைய 3 நபர்களுக்கும், 2-வது கோருரிமையாளர் அசோகனின் தகப்பனார் வி.டி.சென்னையன் என்பவருக்கும், என் தம்பி சொக்கலிங்கத்திற்கும், சின்ராஜ் என்பவருக்கும் இழப்பீடு கொடுக்கப்பட்டது என்றும், எனக்கு இழப்பீடாக எந்த தொகையும் வழங்கப்படவில்லை என்றால், என் தம்பிக்கு கொடுத்த இழப்பீட்டுத்தொகையில் நான் பெற்றுக்கொண்டேன். என்னுடைய பங்கில் எவ்வளவு நிலம் ரோட்டிற்கு எடுத்துக்கொண்டார்கள், அதற்கு இழப்பீடாக எவ்வளவு தொகை கொடுத்தார் என்று சொன்னால் தற்போது ஞாபகம் இல்லை. நான் இதுநாள் வரை என்னுடைய பங்கின் பகுதியையும், நான்கு ரோடு போடுவதற்காக எடுத்துக்கொண்டதால் இழப்பீடு கோரி யாரிடமேனும் மனு

கொடுத்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் என் தம்பியுடன் பகிர்ந்துக் கொண்டேன். நான் சொன்னமாதிரி என் தம்பியிடமிருந்து இழப்புத் தொகையில் பங்கு எதுவும் வாங்கிக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. 2-ம் கோருரிமையாளர் அசோகனின் நிலம் என் நிலத்திற்கு கிழக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். அவர் வெங்கட்ராம செட்டியிடமிருந்து கிரயம் வாங்கியிருக்கிறார் என்றால், அசோகன் வாங்கவில்லை. அவரது தகப்பனார் வாங்கியிருக்கிறார். அவரது அப்பாவிடமிருந்து அசோகன் தானப்பத்திரம் மூலம் வாங்கியிருக்கிறார். நான் சொல்வது தவறு என்றும், 19.03.1990-ல் வெங்கட்ராம செட்டியிடம் அசோகன்தான் கிரயம் வாங்கியிருக்கிறார் என்றால், அதுப்பற்றி எனக்கு தெரியாது. அவர் அப்பா வாங்கியதாக கேள்விப்பட்டேன். என் பங்கிற்கு வடக்கே என் தம்பிக்கு ஒதுக்கப்பட்ட நிலம் உள்ளது என்றும், எங்கள் இருவர் நிலத்திற்கும் கிழக்காக 2-ம் கோருரிமையாளர் அசோகனின் நிலம் உள்ளது என்றால் சரிதான். அசோகன் அவ்வாறு கிரயம் வாங்கிய நிலம் சர்வே எண் 497/1 மற்றும் 497/2 ஆக இரண்டிலும் வருகிறது என்றால் அதுப்பற்றி தெரியாது. அசோகன் நிலத்திற்கு தெற்கே ஓணி (ஆடு மாடுகளை மேய்க்க அழைத்துச் செல்வதற்கான பாதை) உள்ளது என்றால் சரிதான். நான்கு ரோடை ஒட்டி தெற்கு பக்கம் பர்கூர் செல்வதற்கு தற்போது சாலை போடப்படுகிறது என்றால் சரிதான். புதியதாக போடப்பட்டு வரும் சாலைக்கு தெற்கு பக்கம் எனக்கு இடம் உள்ளது என்றால் சரிதான். அதன் சர்வே எண் என்ன என்றால் 497/1சி2 ஆகும். சர்வே எண் 497/2-ல் எனக்கு இடம் உள்ளதா என்றால் தெரியவில்லை. 2-ம்

கோருரிமையாளருக்கு தெரியாமல் உட்பிரிவுகள் செய்யாத போதே நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதற்கான இழப்பீட்டுத்தொகையை நான் வாங்கிக்கொண்டேன் என்றால், சரியல்ல. சாட்சி நெடுஞ்சாலை துறையினர் அழைத்துக்கொடுத்தார். தான் வாங்கிக்கொண்டதாக சொன்னார். அவ்வாறு இழப்பீட்டுத்தொகையை மேற்படி நிலத்தில் எனக்கு மட்டுமே உரிமை உள்ளதாக தெரிவித்து வாங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அதற்கான ஆவணங்களை சமர்ப்பித்த பிறகே இழப்பீட்டுத்தொகை தந்தார்கள். தற்போதும் நான் அசோகனின் நிலத்திற்கும் சேர்த்து இழப்பீட்டுத்தொகை வாங்க முயற்ச்சிக்கின்றேன் என்றால் சரியல்ல. எனக்கு உரிய நிலத்திற்கு மேலாக அசோகனின் நிலத்திற்கும் சேர்த்து இழப்பீடு பெற முயற்ச்சிக்கிறேன் என்றால் சரியல்ல. அசோகனின் பத்திரத்தில் உட்பிரிவு தவறுதலாக சொல்லப்பட்டிருப்பதால் நான் அவ்வாறு இழப்பீடு பெற முயற்ச்சிக்கிறேன் என்றால் சரியல்ல. அசோகனுக்கு வரவேண்டிய இழப்பீட்டுத்தொகையை நான் மறுப்பதற்கு எனக்கு உரிமை ஏதும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read over to the witness and acknowledged by him/her to be correct.

M SUMATHI SAI PRIYA

Principal District Judge
Digitally signed by M SUMATHI SAI PRIYA
Location: Krishnagiri

Principal Sessions Judge,
Krishnagiri.